# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8069869

C

1. District : மாவட்டம் Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 02/2021 | Date நாள் 25.01.2021

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7 (a)

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 07.01.2021 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் 11.30 hrs — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time : நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.01.2021 — Time : நேரம் 08.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Deputy Director of Health Services, Tirunelveli. 4 Km North

   Beat Number : முறைக் காவல் எண்

   (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.VELAYUTHAM
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.SUBRAMANIAN

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 07.10.1982
   (d) Nationality : நாட்டினம் INDIAN
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Driver.
   (g) Address : முகவரி 36, Rajendra Nagar, Palayamkottai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Sankar, Driver, O/o the Deputy Director of Health Services, Tirunelveli.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay.

* GCP-240-34(Type-2) 80,000 Cps -21.3.18(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 25.01.2021-ம் தேதி காலை 08.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.S.வேலாயுதம் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட திருநெல்வேலி சுகாதாரப்பணிகளின் துணை இயக்குனரின் வாகன ஓட்டுனர் திரு.சங்கர் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 25.01.2021-ம் தேதி 09.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2021 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் S.வேலாயுதம், வயது 37/2021, த/பெ சுப்பிரமணியன், 36, இராஜேந்திரன் நகர், பாளையங்கோட்டை. திருநெல்வேலி மாநகரம் பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருநெல்வேலி. அய்யா வணக்கம், நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் சுபா கேப்ஸ் என்ற பெயரில்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 25/1/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் D. Robin Gunasingh
Rank: நிலை Inspector of Police No. எண்
V&AC, Tirunelveli

வாடகைக்கு வாகனம் ஓட்டி வருகிறேன். என்னிடம் TN 03 L 1902 என்ற XYLO வாகனமும், TN 72 BC 7603 என்ற டாடா சுமோ வாகனமும் உள்ளது. நான் கடந்த 2016ம் வருடம் முதல் திருநெல்வேலி சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர் அலுவலகத்தில் RBSK திட்டத்தின்கீழ் அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒப்பந்த அடிப்படையில் மேற்கண்ட இரண்டு வாகனங்களையும் இயக்கி வருகிறேன். நான் டாடா சுமோ வாகனத்தையும், மற்றொரு வாகனத்தை ஓட்டுனர் வைத்து வாகனங்களை இயக்கி வருகிறேன். ஒவ்வொரு வருடமும் ஒப்பந்த அனுமதியை புதுப்பிக்க வேண்டும். அதைப்போல் 2021ம் வருடத்திற்கு புதுப்பிக்க வேண்டி என்னுடைய ஆதார்கார்டு நகல், இரண்டு வாகனங்களின் RC புக் நகல், இன்சூரன்ஸ் நகல், ஓட்டுனர் உரிம நகல் மற்றும் எனது பெயரில் 20 ரூபாய் பத்திரம் ஆகியவற்றை இணைத்து சுகாராரப்பணிகள் துணை இயக்குனர் அலுவலகத்தில் 07.01.2021ம் தேதி சுமார் 11.30 மணியளவில் கொடுத்தேன். அன்றைய தினத்தில் அங்கு இருந்த சுகாராரப்பணிகள் துணை இயக்குனரின் ஓட்டுனர் திரு.சங்கர் என்னிடம் வந்து தன்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி துணை இயக்குனரிடம் சொல்லி வாகன ஒப்பந்தத்தை புதுப்பித்து தருவதாகவும், அதற்கு தனக்கு ஒரு வாகனத்திற்கு ரூ.12,000/- என இரண்டு வாகனத்திற்கும் ரூ.24,000/- தர வேண்டும் என்றும், அவ்வாறு பணம் தரவில்லை என்றால் ஒப்பந்தத்தை புதுப்பிக்க விடமாட்டேன் என்று சொன்னார். நான் DDயை பார்க்கட்டுமா என்று கேட்டபோது, அவர் DDயிடம் நான் சொல்லிக்கொள்கிறேன், நீங்கள் DDயை பார்க்க வேண்டாம் என சொல்லி மறுத்துவிட்டு நான் சொன்ன பணத்தை ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னார். நான் ஒரு வாகனத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/-ம்தான் கொடுப்பார்கள், அதுவும் டீசல், ஓட்டுனர் சம்பளம் மற்றும் பராமரிப்பு செலவு போக எனக்கு கொஞ்சம்தான் பணம் கிடைக்கும் என்று சொனனேன். அதற்கு அவர் ஒரு வாகனத்திற்கு ரூ.10,000/- என ரூ.20,000/- தர வேண்டும் இல்லை என்றால் வாகன ஒப்பந்தத்தை கிடைக்கவிடாமல் செய்து விடுவேன் என்றும் சொன்னார். நான் அவ்வளவு பணம் ஏதும் என்னிடம் இல்லை. ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நானும் வேறு வேலைகள் இருந்ததால் அலுவலகத்திற்கு செல்லவில்லை. ஓட்டுனர் திரு.சங்கர் கடந்த 20.01.2021ம் தேதியிலிருந்து அவரது செல்போன் எண் 8825550194 என்ற எண்ணில் இருந்து என்னை எனது செல்போன் எண் 9943263600 என்ற எண்ணில் தினமும் தொடர்பு கொண்டு முக்கூடல், உக்கிரன்கோட்டை PHC-ல் உள்ள வண்டிக்கு தலா ரூ.10,000/- வைத்து கொடுத்து விட்டார்கள், நீயும் பணத்தை

கொடுத்தால் மொத்தமாக எல்லாருக்கும் ஒப்பந்தத்தை புதுப்பித்து கொடுத்துவிடலாம். எனவே சீக்கிரம் பணத்தை கொண்டு வருமாறு சொல்லி வருகிறார். நானும் ஏதாவது ஒரு காரணம் சொல்லி நாட்களை கடத்தி வந்தேன். இந்நிலையில் 23.01.2021ம் தேதி என்னை தொடர்பு கொண்டு திங்கட்கிழமை அதாவது 25.01.2021ம் தேதி காலையில் நான் கேட்ட பணத்தை கொண்டு வந்து தராவிட்டால் அலுவலகத்தில் சொல்லி வாகன ஒப்பந்தத்தை கிடைக்கவிடாமல் செய்து விடுவேன் என்று கண்டிப்புடன் சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டேன். பிறகு நான் யோசித்து பார்த்தபொழுது தகுந்த ஆவணங்களுடன் முறையாக ஒப்பந்தத்தை புதுப்பிக்க ரூபாய் 20,000/- கேட்கிறார் என்று எனது மனம் கஷ்டப்பட்டது. அவருக்கு பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. இன்று 25.01.2021ம் தேதி திங்கட்கிழமை புகார் மனு கொடுக்கிறேன். தனது செல்வாக்கை பயன்படுத்தி வாகன ஒப்பந்தத்தை புதுப்பிக்க என்னிடம் ரூ.20,000/-ம் கேட்ட சுகாதார பணிகளின் துணை இயக்குனரின் ஓட்டுனர் திரு.சங்கர் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒம்.S.வேலாயுதம்)

Sir, Received the complaint on 25.01.2021 at 08.00 hrs and conducted confidential enquiry. I registered a case in Tirunelveli V&AC Cr.No.02/2021 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 25.01.2021 at 09.00 hrs. sd.D.Robin Gnanasingh, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

25/1/2021
D. Robin Gnanasingh
Inspector of Police
V&AC, Tirunelveli